**செய்தி வெளியீடு எண்: 1 8 9** **நாள் : 29.04.2015**

**செய்தி வெளியீடு**

நேரடி இரண்டாமாண்டு (Lateral Entry) பட்டயப் படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் கீழ்க்காணும் கல்வித் தகுதியினை நிறைவு செய்திருக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1 | +2 தேர்ச்சி மற்றும் 10-ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் 2 வருட ITI தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள 41 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் **நேரடி இரண்டாமாண்டு (Lateral Entry)** பட்டயப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை. |
| 2 | +2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சென்னை, தரமணியிலுள்ள மைய பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில் நடத்தப்படும் 2½ வருட செயற்கை அவயங்கள் மற்றும் முடநீக்கியியல் பட்டயப் படிப்பிற்கான **முதலாமாண்டு சேர்க்கை.** |
| 3 | +2 தேர்ச்சி பெற்ற மாணவியர்களுக்கு சென்னை, தரமணியிலுள்ள டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில் நடத்தப்படும் ஒரு வருட ஒப்பனைக் கலை பட்டயப் படிப்பிற்கான சேர்க்கை. |

மாணவர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் விண்ணப்பங்களை மே மாதம் 4-ஆம் தேதி முதல் நேரில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.150/-. தமிழ்நாட்டைச் சார்ந்த பட்டியல் / பழங்குடி **(SC/ST)** இனத்தவருக்கு விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அவர்கள் விண்ணப்பத்தினை இலவசமாகப் பெற சாதிச் சான்றிதழ் சான்றொப்பமிட்ட நகல் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், விண்ணப்பத்தினை www.tndte.com என்ற இணையதளத்திலிருந்தும் மே மாதம் 4-ஆம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அந்தந்த அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 22.5.2015.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**